**தேதி :** 11.11.2025 **SC.No. :** 851/2016 PW **:17** சிவமுருகன்

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**1 முதல் 3, 8, 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இதே சம்பவத்தில் இந்த வழக்கின் சாட்சிகள், எதிரிகளை தாக்கி காயப்படுத்தியதாக குற்ற எண்.159/2014, சட்டப்பிரிவுகள் 147, 148, 294(பி), 448, 323, 324, 307,506(2) இதச வழக்கு தொடரப்பட்டு அந்த வழக்கில் நான் புலன் விசாரணை அதிகாரியாக இருந்தேன் என்றால் சரிதான். சாட்சி கபில்தேவ் அந்த வழக்கில் 3 வது எதிரி என்றால் சரிதான். புலன் விசாரணைக்காக நான் இந்த வழக்கை எத்தனை மணிக்கு, எந்த தேதியில் பெற்றுக்கொண்டேன் என்றால் 08.05.2014 அன்று 15.00 மணிக்கு பெற்றுக்கொண்டேன். ஜான்ஜெபதுரை என்பவரை எதிரி கேலி செய்ததாக முதல்தகவல்அறிக்கையிலும், அ.சா.1 கொடுத்த வாக்குமூலத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்றப்பத்திரிக்கையில் எதிரிகளுக்கும், அ.சா.1 க்கும் மணல் அள்ளுவது சம்பந்தமாக பிரச்சனை இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல்தகவல்அறிக்கையில் அவ்வாறு உள்ளது.

சம்பவயிடத்திற்கு கபில்தேவ் செல்வதற்கு முன்பே, அ.சா.2 ஜான்ஜெபதுரை தாக்கப்பட்டார் என்று என்னுடைய விசாரணையில் துலங்க வந்தது என்றால் சரியல்ல. ஜான்ஜெபதுரை என்னுடைய விசாரணையில் சம்பவம் நடந்து 10, 15 நிமிடங்கள் கழித்து கபில்தேவ், வின்ஸ்டன் ராஜ்குமார் அவர்கள் சம்பவயிடத்திற்கு வந்ததாகவும், ஜான் ஜெபத்துரை சொல்லி சம்பவத்தை குறித்து அவர்களுக்கு தெரிந்ததாகவும் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். குற்ற எண்.159/2014 வழக்கின் சம்பவ நேரம் 11.00 மணி என்றால் எனக்கு ஞாபகமில்லை. இந்த வழக்கின் சம்பவநேரம் 11.45 என்றால்

சரிதான். சாட்சி சேகரன், சாட்சி கபில்தேவ்வின் தந்தை என்றால் சரிதான்.

அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். மருத்துவர் என்னுடைய விசாரணையில் காயம்பட்ட சாட்சிகளை 5 நபர்கள் தாக்கியதாக மருத்துவரிடம் சொல்லியதாக கூறியுள்ளார்கள் என்றால் விபத்து பதிவேட்டில் அவ்வாறு தான் சொல்லப்பட்டுள்ளது. முதல்தகவல்அறிக்கை மற்றும் என்னுடைய விசாரணையில் சாட்சிகளை 11 நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். குற்றப்பத்திரிக்கையில் 3 நபர்கள் தாக்கியதாக குறிப்பிட்டுள்ளேன். அ.சா.4 சேகரன் சம்பவம் நடந்து அரை மணிநேரத்தில் காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றதாக என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. அ.சா.1 டம் சிறப்பு சார்பு ஆய்வாளர் வேல்முருகன் புகார் வாக்குமூலம் பெற்றுள்ளார். பெண் போலீசார் புகார் வாக்குமூலம் வாங்கியதாகவும், நான் உடனிருந்ததாகவும் கூறியிருந்தால் அது தவறு.

அ.சா.2 ஜான் செல்லத்துரை என்னுடைய விசாரணையில், கபில்தேவ், வில்சன், ஜெபக்குமார் ஆகிய 3 பேர்களை தவிர சம்பவத்தை வேறு யாரும் பார்க்கவில்லை என கூறியுள்ளார் என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் 1, 2, 3 Counter Case–ல் குற்றவாளிகள் என்றால் சரிதான். அ.சா.7, அ.சா.8 ற்கும், அ.சா.1 ற்கும் முன்விரோதம் இருந்ததாக வழக்கு கோப்பில் துலங்காது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் எதிரிகள் சங்கர், அசோக்குமாரிடம் எவ்வளவு நேரம் வாங்கினேன் என்றால் முக்கால் மணி நேரம் வாங்கினேன். அப்போது, ஆட்கள் நடமாட்டம் அந்த இடத்தில் இருந்தது என்றால் காவல்நிலையத்தில் வைத்து தான் சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல்

வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. ரயில்வே கேட் அருகில் யார், யாருக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது என்று எனக்கு தெரியுமா? என்றால் தெரியாது. எதிரி சங்கரின் வீட்டின் கதவு எண், தெரு, எந்த திசையை நோக்கி வீடு உள்ளது என்று வழக்கு கோப்பில் துலங்குமா? என்றால் இல்லை.

ஆயுதங்களை கைப்பற்றும்போது, அந்த இடத்தில் 50, 100 நபர்கள் கூடியிருந்தார்களா? என்றால் இல்லை. சங்கர் வீட்டில் எந்தப் பகுதியிலிருந்து நான் ஆயுதங்களைப் கைப்பற்றினேன் என்றால் மொட்டை மாடியின் பில்லரை ஒட்டி கைப்பற்றினேன். சம்பவம் அரை மணி நேரம், ஒரு மணி நேரம் நடந்ததா? என்றால் 20 நிமிடம் நடந்திருக்கும். இந்த வழக்கின் Counter Case–ல் 1வது எதிரி சங்கரின் கடைக்குள் சாட்சிகள் அத்துமீறி நுழைந்த ஆயுதத்துடன் எதிரிகளை தாக்கியதாக முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1, அ.சா.2, அ.சா.3 க்கும், எதிரிகளுக்கும் சுப்பிரமணியசுவாமி கோவில் இடம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். அந்த விரோதத்தின் அடிப்படையில் 1வது எதிரியின் கடைக்குள் சாட்சிகள் நுழைந்து, ஆயுதங்களை வைத்து எதிரிகளை தாக்கியது மட்டும் தான் உண்மை சம்பவம் என்றால் சரியல்ல.

சாட்சிகள் எதிரிகளை தாக்கும்போது, அவர்களுக்காகவே தாக்குதல் பட்டு காயத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரிதான். எதிரிகள் மீது சாட்சி சேகரன் வேறு பல புகார்கள் கொடுத்து அந்த புகார்கள் உண்மையில்லை என முடிக்கப்பட்டது என்றால் சிவில் வழக்கு இருந்ததினால், சமரசம் பேசி முடித்தோம். நான் இந்த வழக்கின் சாட்சிகளை சரவர விசாரணை செய்யாமல், ஒருதடைபட்சமாக விசாரணை செய்து விட்டு, குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன

மாதிரி, சொன்ன தேதி, நேரத்தில், இடத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் என்னிடம் எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், அவர்களிடமிருந்து எந்தவிதமான ஆயுதங்களும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் சாட்சிகளை தாக்கவில்லை என்றாலும், எதிரிகள் தாக்கப்பட்ட சம்பவம் தான் உண்மையான சம்பவம் என்றாலும் சரியல்ல.

**<u>4, 6, 7 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –**

குற்ற இறுதி அறிக்கை 3 நபர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையில் சோமசுந்தரம் என்பவர் தலைமையில் மயிலப்பபுரம் சுப்பிரமணியசுவாமி கோவில் நிர்வாகத்தினர் ஒரு தரப்பினராகவும், புகார்தாரர் கபில்தேவ் தகப்பனார் சேகரன் தலைமையில் அம்மன் கோவில் நிர்வாகம் சார்ந்தவர்கள் ஒரு தரப்பினராகவும் செயல்பட்டு வருவதாக தெரிய வந்தது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

சுப்பிரமணியசுவாமி கோவிலுக்கு சொந்தமான சந்தையிடம் சம்பந்தமாக இருதரப்பினர்களுக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டு, வழக்கு நடந்து வருவதாக குற்ற இறுதிஅறிக்கையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் பற்றி ஆலங்குளம் வட்டாட்சியர் இருதரப்பினர்களையும் அழைத்து சமாதான பேச்சு வார்த்தை நடத்தி, உத்தரவு பிறப்பித்ததாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த குற்ற இறுதி அறிக்கையில் சமாதான பேச்சு வார்த்தையில் வட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவு காரணமாக அம்மன்கோவில் தரப்பினர்களுக்கு அதிருப்தி இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

மேலும், குற்ற இறுதிஅறிக்கையில் முதல்தகவல்அறிக்கையில்

குறிப்பிட்டுள்ள அனைத்து நபர்களும் சம்பவத்தில் ஈடுபடவில்லை, சங்கர், சூர்யகலா மற்றும் அசோக் ஆகியோர் மட்டுமே சம்பவத்தில் ஈடுபட்டதாக தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மற்ற எதிரிகள் முன்விரோதம் காரணமாக பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளதாக குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். Counter Case சம்பந்தப்பட்ட முதல்தகவல்அறிக்கை, இறுதி அறிக்கை, இதர ஆவணங்களை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரெதிர் வழக்குகளில் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகளை பின்பற்றவில்லை என்றால் சரியல்ல. வேண்டுமென்றே Counter Case வழக்கில், இந்த வழக்கினை பற்றி கூறாமல் மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் கொடுத்த வழக்கு முழுவதனையும் நிராகரித்து, குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், முன்விரோதம் காரணமாக பொய்யாக வழக்கு போடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

சாட்சி திண்டுக்கல் முதன்மை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru.Karthikeyan, System Analysist, முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.12 12:10:33 +0530